21st January 1965]

நூற்பு ஆலைகள்

* 46 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி (திரு. ம. கமலநாதன் சார்பில்): கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடசேலம் மாவட்டத்தில் நூற்பு ஆலை ஒன்று ஆரம்பிக்க தனியார்க்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டுள்ளதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வடசேலம் அபிவிருத்தி மாவட்டத்தில் ஹோசூர் தாலூக்காவில் தனியார் துறையில் ஒரு நூற்பு ஆலை நிறுவ லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

* 47 Q.—SRI K. CHEEMAICHAMI (on behalf of SRI C. SRINIVASAN): Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to establish a spinning mill in the area near Illayangudi in Paramakudi taluk of Ramanathapuram district ?

THE HON. SRI R. VENKATARAMAN : A cotton spinning mill is under construction at Kamudakudi, near Illayangudi in the Paramakudi taluk.

காகித உற்பத்தி ஆலை

* 48 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் காகித உற்பத்தி ஆலை ஒன்று ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(இ) ஆமென்றால் எந்த தாலுகாவில் எப்பொழுது ஆரம்பிக் கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார் துறையில் இரு காகித ஆலைகள் நிறுவ லைசென்சுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று பட்டுக் கோட்டை தாலூக்காவில் ஆரம்பிக்கப்படும். மற்றொரு ஆலையை எந்த இடத்தில் நிறுவுவதென்பது இன்னும் தீர்மானிக்கப்பட வில்லை. ஆலைகள் கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கப்படலாம்.

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதித்தல்

* 49 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரிகளில் 10 சதவிகிதம் இடங்கள் மற்ற மாநில மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று மாநில அரசாங்கம் ஏதேனும் முடிவு எடுத்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அப்படி ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு மாண வர்களைத் தேர்ந்து எடுக்கும் பொறுப்பு யாருடையது?